பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி30 வெள்ளிக்கிழமை 12.04.2024 கதிர் 157

# வேட்பாளர் ரணிலாகவும் இருக்கலாம் ஆனால் சின்னம் மொட்டு மட்டும்தான்

## நாமல் ராஜபக்ச திட்டவட்டம்

பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தாமரை மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுவார் என்றும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யானைச் சின்னத்தினைக் கைவிட்டுள்ளமையால் மொட்டுவின் வேட்பாளர் அவராகக்கூட இருக்கலாம் என்றும் அதன் தேசிய அமைப்பாளரும், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கண்டிக்கு வருகை தந்த நாமல் ராஜபக்ச அஸ்கிரிய, மல்வத்து ☞ 2

# இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைத் தமிழர்கள் சார்பில் நிறுத்துவது என்பது தொடர்பில் சிலபல முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்த நிலையில், இன்று அது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று கூறும் கட்சிகளுக்கும் அந்த முடிவை ஆதரிக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் இடையிலான சந்திப்பு அது. ஏற்கனவே காட்சி ஊடகம் ஒன்று வடக்கு கிழக்கு சிவில் அமைப்பு என்று தான்னுடைய ஆட்களைக் கொண்டு தானே உருவாக்கிக்கொண்ட ஒரு சிவில் அமைப்பின் பேரில்தான் இந்த பொது வேட்பாளர் தொடர்பான முயற்சிகளுக்குப் பின்புலமூட்டப்பட்டது. இந்தச் சிவில் அமைப்பின் முதல் பணி, இந்தியப் பிரதமர் மோடிக்கு சிவில் சமூகம் என்ற பெயரில் கடிதம் எழுதியது. அடுத்த பணி இந்தப் பொது வேட்பாளர். இந்த இரண்டுக்கும் இடையில் ஏதாவது தொடர்புகள் இருக்குமோ என்று வாசகர்களாகிய நீங்கள் சிந்தித்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

இப்படியாக அவ்வப்போது ☞ 2

# சு.கவின் பதில் தலைவராக நிமல் எப்படி வரமுடியும்?

## தயாசிறி ஜயசேகர கொந்தளிப்பு

மைத்திரிக்கு எதிரான வழக்கில் பிரதிவாதியான நிமல் சிறிபால டி சில்வா எப்படி சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக முடியும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் செயலாளர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் அவர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் நிமல் சிறிபால டிசில்வா பிரதிவாதியாகக் காணப்படுகின்றார். அவ்விதமான ஒருவரை எவ்வாறு பதில் தவிசாளராக நியமிக்க முடியும்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக பெறப்பட்டுள்ள தடை உத்தரவானது, நிமல் சிறி டில்வாவுக்கும் எதிரானதாகவே காணப்படுகின்றது.

அதேநேரம், தனியொரு சட்டத்தரணியானவர் நாட்டில் உள்ள ☞ 2

# மொட்டு கட்சியின் அமைச்சர்கள் ரணிலையே விரும்புகிறார்கள்

## எஸ்.பி.திஸநாயக்க தெரிவிப்பு

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் விரும்புகிறார்கள் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் பொது ஜன பெரமுனவின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்க வேண்டும் என்றும் அவரை ஆதரிப்பதென்றும் சிந்திக்கின்றார்கள்.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் உட்பட அனைத்து விடயங்களையும் ஒரு நிலைக்கு கொண்டு வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் முன்னெடுத்த செயற்பாடுகளை யாராலும் மறந்துவிட முடியாது.

பொது ஜன பெரமுன பூச்சிய நிலைமைக்குச் சென்று தற்போது அதிலிருந்து மீண்டு வந்துகொண்டிருக்கின்றது. கட்சியின் பெயரால் அமைச்சுப் பதவிகளை, இராஜாங்க அமைச்சுப் பதவிகளை, நாடாளுமன்றக் குழுக்களின் பதவிகளை பெற்றுக் கொண்டவர்களுக்க ஒரு விடத்தினை வெளிப்படுத்துவதற்கு விரும்புகின்றேன்.

பொது ஜன பெரமுனவினை பிளவுபடுவதற்கு இடமளிக்க வேண்டாம். அதுபற்றிய கடலந்துரையாடல்களை உடன் செய்து நிலைமைகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டியது அவசியமானது - என்றார்.

# இலங்கைக்குப் பாராட்டு

நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்கவகையிலான முன்னேற்றத்தைக் காண்பித்திருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் உட்சவ் குமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மீட்சிக்கான குறிகாட்டிகளுடன் இணைந்ததாக இந்த மறுசீரமைப்புக்கள் மூலம் கிடைத்துள்ள பெறுபேறுகள் குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இருப்பினும் வறிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினர் மீது ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் இலங்கை கவனம் செலுத்தவேண்டியது மிக அவசியமாகும்.

அதேபோன்று இந்த நெருக்கடிக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களைவதற்கும், நிலையான மீட்சிக்கான அடித்தளத்தை இடுவதற்கும், மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும், வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும் தற்போதைய மறுசீரமைப்புக்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார்.

# பிணைமுறி மோசடியில் தொடர்புபட்ட எவருமின்றி உருவானதுதான் ஐ.ம.ச.

## சஜித் பிரேமதாஸ பெருமிதம்

இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற பிணைமுறிகள் மோசடியுடன் தொடர்புபட்டவர்களை உள்வாங்காமல் உருவாக்கப்பட்ட கட்சிதான் ஐக்கிய மக்கள் சக்தி என்று அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில், ஐ.தே.கட்சியை உடைத்தார் என்று தன் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளிற்கு பதில் அளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களை நாம் எம்முடன் இணைத்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொண்டோம்.

மத்தியவங்கி பிணைமுறி மோசடிகளின் சூத்திரதாரிகளை வெளியேற்றிய பின்னரே எங்கள் கட்சி அரசியல் பயணத்தை தொடங்கியது. எங்கள் கட்சியின் பயணம் ஜனாதிபதி பதவிக்கானதோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கானதோ இல்லை. இலங்கை மக்களுக்கானது.

எமது கட்சி தலைமையிலான ஆட்சியில் நாம் எந்தவொரு மோசடியாளர்களையும் உள்ளீர்க்கப்போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றோம் என்றார்.

# சுமந்திரனை ஜே.வி.பி. அவமானப்படுத்திவிட்டது

## அமைச்சர் டக்ளஸுக்கு கடும் கவலை

ஜே.வி.பியின் மாநாட்டுக்கு அழையா விருந்தாளியாக சுமந்திரன் வந்திருந்தார் எனக் கூறி சுமந்திரனை அ;தக் கட்சி அவமதித்தது விரும்பத்தகாத செயல் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழப்பாணத்திலுள்ள தனது அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர், ஜே.வி.பியின் கருத்துத் தொடர்பில் அங்கு எழுப்பப்பட்ட கேள்விக்கு ☞ 2

# இரு பொலிஸார் கைது

## பாரவூர்தி சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில்

அநுராதபுரம் - மதவாச்சியில் வைத்து பாரவூர்தி சாரதியான 23 வயதான இளைஞர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சார்ஜன்ட் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 7 உத்தரவை மீறி பயணித்த பாரவூர்தியைப் (லொறி) பின்தொடர்ந்து சென்று நிறுத்தி, அதிலிருந்தவர்களை கைது செய்ய முற்பட்டபோது, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. ☞ 2

# மியான்மரில் மீட்கப்பட்ட எட்டு இலங்கையர்களும் விரைவில் நாடு திரும்புவர்

## அயலுறவு அமைச்சர் தெரிவிப்பு

மியன்மாரின் மியவடி பகுதியிலிருந்து மீட்கப்பட்ட 8 இலங்கையர்கள் பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், அவர்கள் வெகுவிரைவில் இலங்கைக்குத் திருப்பியனுப்பிவைக்கப்படுவார்கள் எனவும் அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விடயம் ☞ 2

# பொருளாதார மறுசீரமைப்பு வளர்ச்சியை எட்ட அவசியம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி வலியுறுத்து

உள்நாட்டில் வளர்ச்சியை அடைவதற்கு தற்போதைய பொருளாதார மறுசீரமைப்புக்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி வலியுறுத்தியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள 2024 ஏப்ரல் மாதத்துக்கான ஆசிய அபிவிருத்தி மதிப்பீட்டின்படி, கடந்த இருவருடங்களாகத் தொடர்ந்து அவதானிக்கப்பட்ட ☞ 2

# ஏப்ரல் முதல் 9 நாட்களில் மட்டும் 50,000 சுற்றுலாவிகள் வருகை

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஏப்ரல் மாதத்தின் முதல் 9 நாட்களில் 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்தக் காலப் பகுதியில் 50,537 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 9 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 6 ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தங்கள் அரசியல் சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய எழும் சிவில் அமைப்புக்களும் ஈழத்தமிழர் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்க நேரம் தருமாறு கேட்டுக் கடிதம் எழுதப் போகின்றோம் என்று சொன்ன தமிழ்க் கட்சிகளும் இன்றைய கூட்டத்தில் பங்கெடுக்கவுள்ளன. (கடைசிவரை அந்தக் கடிதம் பின்னர் அனுப்பப்படவேயில்லை. அதில் ஒரு கட்சித் தலைவர் ஓம் ஓம் என்று சொல்லியே கடிதத்தில் கையெழுத்து வைக்க வரவேயில்லை) கூட்டத்துக்கான அழைப்பின் பின்னணியில் விக்னேஸ்வரன் இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

பொது வேட்பாளராகத்தான் நிற்பதற்குத் தயார் என்று அறிவித்திருந்த அவர், அண்மையில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தானே பொது வேட்பாளருக்குப் பொருத்தமானவர் என்றும் தெரிவித்திருந்தார். அதுமட்டுமல்ல தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் பொது வேட்பாளர் யோசனையை எதிர்ப்பதற்குக் காரணம், அவர் சிங்களத் தலைவர்களின் தயவில் அனுபவித்துவரும் எதிர்க் கட்சித் தலைவருக்கானசொகுசு இல்லத்தில் தொடர்ந்தும் வாழ்வதற்குத்தான் என்றும் சாடியிருந்தார். இப்போது அவரதுபின்புலத்துடன், அவரேதான் அழைப்புக்களை அனுப்பினார் என்றும் கூறப்படுகின்றது,

இன்றைய கூட்டத்துக்கான அழைப்பு கடிதத்தோடு இன்னொரு கடிதத்தையும் அவர் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி இருக்கின்றாராம். அதன்படி பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தை முன்னெடுப்பதற்கு ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக உபகுழுக்கள் நிறுவப்படவேண்டும் என்றும் யோசனைகளை, பரிந்துரைகளை அதில் முன்வைத்துள்ளராம்.

கூட்டத்துக்கான வழிகாட்டல் குறிப்புக்கள் என்ற பெயரில் அவர் இந்த முன்மொழிவுகளை வைத்துள்ளார். பொருத்தமானபொது வேட்பாளரைப் பரிந்துரை செய்யும் குழு, தேர்தல்விஞ்ஞாபனத்தைதயார் செய்யும் குழு, சின்னம் தொடர்பான விடயங்களைக் கையாளும் குழு, ஏனைய அமைப்புக்களையும் கட்சிகளையும் உள்ளீர்க்கும் குழு, பேச்சுக்களை மேற்கொள்ளும் குழு, தேர்தல் செயற்பாடுகளையும் பரப்புரைகளையும் திட்டமிடும் குழு, அலுவலக நிர்வாகம் மற்றும் நிதிக் குழு என்று பல குழுக்களை நிறுவுவதற்கான பரிந்துரைகள் காணப்படுகின்றன. அதாவது இன்றைய கூட்டத்தில் இந்தக் குழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டு பணிகள் விரைவுபடுத்தப்படவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

ஆனால், தமிழ்அரசுக்கட்சி இந்த விடயத்தில் எந்தவொரு தீர்க்கமான முடிவையும் எடுக்கவில்லை. அந்தக் கட்சியின் சம்பந்தர், சுமந்திரன், சிவிகேசிவஞானம் ஆகியோர் பொது வேட்பாளர் யோசனைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மட்டுமே தான் அந்த யோசனைக்கு ஆதரவு என்று அறிவித்திருக்கிறார். ஒரு கூட்டத்தில் இந்த யோசனையை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டால் தமிழ் அரசுக் கட்சியுடன் பேசி அது தொடர்பில் ஒரு முடிவை எடுக்கலாம் என்று தெரிவித்தத்தை தவிர தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரான சிறீதரன் இது குறித்து வெளிப்படையான கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கவில்லை. வழக்கமாக ''ஒற்றுமை ஒற்றுமை'' என்று குரலுக்கு இலகுவில் தலையாட்டும் மாவை சேனாதிராசா கூட, கட்சியின் வழக்குமுடியட்டும் பிறகு பார்க்கலாம் என்றுதான் கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ முடிவு எதனை நோக்கியதாக இருக்கும் என்பது தெரியாத நிலையில், அதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பொது வேட்பாளர் தெரிவை முன்னகர்த்துவதற்கு அதற்குப் பின்னால் இயங்கும் சில சக்திகள் அவசரப்படுகின்றன என்பது தெரிகின்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இந்தப் பொது வேட்பாளர் தெரிவை ஏற்கனவே நிராகரித்துவிட்டது. ஜனாதிபதித் தேர்தலையே நிராகரிக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கட்சியின் முடிவு. இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியும் இந்தப் பொது வேட்பாளர் தெரிவை நிராகரித்துவிட்டால் அந்த யோசனையே முற்றிலுமாகப் பிசுபிசுத்துப் போய்விடும். அதன் பின்னர் யாரைப் பொதுவேட்பாளராகத் தெரிந்தெடுத்தாலும் அதனால் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை. அதனாலேயே இதுவிடயத்தில் அவசரப்பட்டு ஏனைய கட்சிகள் ஒரு முடிவுக்குவந்தது போலக்காட்டி தமிழ் அரசுக்கு அழுத்தம் கொடுக்க சில சக்திகள் முயற்சிக்கின்றன. ஆனால், இந்தச் சித்து விளையாட்டுக்கள் எல்லாம் தமிழ் அரசுக் கட்சியிடம் எடுபடும் என்று தோன்றவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடாதிபதிகளைச் சந்தித்து உரையாடியதோடு தலதா மாளிகையிலும் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதில் பெரும் போட்டி காணப்படுகின்றது. பல தெரிவுகள் உள்ளன. அரசியல் தலைவர்கள் உள்ளனர், வர்த்தகர்கள் உள்ளனர், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் உள்ளனர். அவர்கள்தான் கட்சியை உருவாக்கியவர்கள் என்றும் கூறுகின்றார்கள்.

எனவே எம்மிடம் பல மாற்றுத்தெரிவுகள் உள்ளன. அதனால் எம்மால் சிறந்த வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியும். என்னை முன்மொழிவதாக இருந்தால் கூட கட்சியே அதனைத் தீர்மானிக்கும்.

தற்போதைக்குஎனக்குகட்சியை வலுப்படுத்துவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பணியை நான் முழுமையாக முன்னெடுத்து வருகின்றேன்.

நான்பொதுஜனபெரமுனவையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

நாம் கட்சி சார்ந்த நபர்களாகவே உள்ளோம். எனினும் ரணில் விக்கிரமசிங்க அவரது கட்சி தொடர்பில் தீர்மானிக்க வேண்டும். தேர்தலில் போட்டியிடுவதற்கான அறிவிப்பு விடுகின்றபோது அதுபற்றி உரையாடலாம்.

எம்மைப் பொறுத்தவரையில் வேட்பாளரின் பெயர் எதுவாக இருந்தாலும் சின்னம் தாமரை மொட்டாகத்தான் இருக்கும். ரணில் விக்கிரமசிங்க யானைச் சின்னத்தினை கைவிட்டுள்ளமையால் அவரது சின்னம் மொட்டாகக் கூட இருக்கலாம் என்றார்.

## ஏப்ரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லட்சத்து 86 ஆயிரத்து 321 பேர் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 45 சதவீத அதிகரிப்பாகும்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் காயமடைந்த இளைஞர், மதவாச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின்போது, அவரது விதையொன்று அகற்றப்பட்டது. உடலில் பல காயங்களுக்கும் அவர் உள்ளாகி இருந்தார்.

## மியான்மாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மியன்மாரின் மியவடி பகுதியிலிருந்து கடந்த மார்ச் 4 ஆம் திகதி மியன்மார் நாட்டு அதிகாரிகளால் மீட்கப்பட்ட இலங்கையர்கள் அவ்வதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் தாய்லாந்தின் மியோஸோற் அழைத்துச்செல்லப்பட்டு, தாய்லாந்து குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். தற்போது அவர்கள் பாங்கொக்கில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பில் உள்ளனர்.

இதேவேளை, மியன்மார் அதிகாரிகளால் மீட்கப்பட்ட இலங்கையர்களை இலங்கைக்கு அழைத்துவருவது தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி மியன்மார் மற்றும் தாய்லாந்து நாடுகளின் அயலுறவுத்துறை அமைச்சர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அதற்கமைய அவசியமான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டவுடன் பாங்கொக் மற்றும் யாங்கொனில் உள்ள இலங்கை தூதரகங்கள், இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து மீட்கப்பட்ட இலங்கையர்களை நாட்டுக்குத்திருப்பிஅனுப்பிவைக்கத் தயாராக உள்ளன - என்றுள்ளது.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரச் சுருக்கத்தை அடுத்து இவ்வருடம் இலங்கை 1.9 சதவீத மிதமான வளர்ச்சியையும், 2025 இல் 2.5 சதவீத வளர்ச்சியையும் பதிவுசெய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் பின் அரைப் பாகத்திலிருந்து இலங்கையில் பொருளாதார மீட்சிக்கான குறிகாட்டிகள் தென்படுகின்றன. பணவீக்கம் ஓரிலக்கப் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டுக் கையிருப்பின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. நாணய மாற்றுவிகிதம் உயர்வடைந்துள்ளது.

சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்பல்கள் மூலமான வருமானம் தொடர்ந்து சாதகமட்டத்தில் பதிவாகிவருகின்றது. உரிய காலத்தில் வெளியகக் கடன் மறுசீரமைப்பைப் பூர்த்திசெய்வதானது இலங்கையின் கடன் உறுதிப்பாட்டுக்கு உதவும்' என ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## சு.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதிகளுக்கு விடுக்கும் அழுத்தங்கள் தொடர்பில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவற்றை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்ககூட இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடமாட்டார். எனினும் அவரது பெயரைப் பயன்படுத்தி ஒரு சட்டத்தரணிகள் செயற்படுகின்றனர். ஒருவர் ஜனாதிபதி சட்டத்தரணியும் ஆவார். அது பற்றிய விடயங்களை நாடாளுமன்றத்தில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

## சுமந்திரனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கும்போது இதனைத் தெரிவித்தார். -

அண்மையில் தென்னிலங்கை தேசியக் கட்சியான ஜே.வி.பி. கட்சி தனது மாநாடொன்றையும் தொடர்ந்து பொருளாதாரத் துறை சார்ந்தவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றையும் யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தது.

அவற்றில் கலந்துரையாடலின் இறுதிக் கட்டத்தில் சுமந்திரனும் அங்கு வருகை தந்திருந்தார். அழைப்பு விடுக்காமலேயே தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் சென்றார் என்று ஜேவிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். இது குறித்தே டக்ளஸ் கவலை தெரிவித்திருந்தார்.

தமதுநிகழ்வில்கலந்துகொண்ட ஒருவரை அவமானப்படுத்தும் வகையில் ஏன் அவ்வாறு கூறினார் என்று தெரியவில்ல.

மாநாடொன்றிற்கு ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுவது இயல்பான ஒன்றுதான். அழைப்பு விடுக்கப்பட்டால் அந்த அழைபை ஏற்று அழைக்கப்பட்ட கட்சியின் சார்பில் எவரும் செல்லமுடியும்.

அந்த வகையில்தான் சுமந்திரனும் சென்றிருப்பார் என நினைக்கின்றேன். ஆனால், சுமந்திரனை அவமானப்படுத்தும் வகையிலேயே குறித்த பேச்சாளர் கூறியுள்ளார் என்றே நான் கருதுகின்றேன். அப்படி அவமானப்படுத்துவது எனக்குப் பிடிக்கவில்லை.

இதேவேளை குறித்த கட்சி ஒரு தேசியக் கட்சி. அண்மையில் குறித்த கட்சியின் முக்கியஸ்தர்கள் இந்தியா சென்றிருந்தனர். அவர்கள் அங்கு தமிழர் பிரச்சினை பற்றி பேசியிருக்கமாட்டார்கள் என்பதோடு அது தொடர்பில் பேசுவதற்கும் விரும்பியும் இருக்கமாட்டார்கள்.

மீனவர் பிரச்சினை தொடர்பிலாவது பேசியிருக்கலாம். ஆனால் அவ்விடயம் தொடர்பிலும் அவர்கள் வாய்பொத்தியே இருந்துள்ளனர். தமிழர்களின் அரசியலுரிமை தொடர்பில் அவர்கள் பேசியிருக்கமாட்டார்கள் என்று எனக்கு நன்கு தெரியும். ஆனால் மீனவர் பிரச்சினை தொடர்பில்கூட அங்கு பேசவில்லை என்பது எனக்கு மனவருத்தமாக உள்ளதுடுஎன்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# 3 லட்ச ரூபா பெறுமதியான பொருள்களை பொலிஸார் மீளவும் வழங்கவில்லையாம்

## வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகம் குற்றச்சாட்டு





இந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று சைவ வழிபாட்டு சடங்குகளை சீர்குலைத்து, வவுனியாவில் உள்ள ஆலய வளாகத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரம் உள்ளிட்ட பல உபகரணங்களை நீதிமன்ற உத்தரவின் பேரில், பொலிஸார் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டி நிலைமை ஏற்பட்டுள்ளது.

வெடுக்குநாரி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வர் ஆலயத்தில் ஒரு மாதத்திற்கு முன்னர் கைப்பற்றப்பட்ட மூன்று இலட்ச ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய பூஜைப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களை பொலிஸார் இதுவரை மீள வழங்கவில்லை என ஆலய நிர்வாகத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்ட அனைத்துப் பொருள்களையும் விடுவிக்கக் கோரி, ஆலய நிர்வாகத்தினரும், கைது செய்யப்பட்ட எட்டு சைவத் தமிழர்களும் தாக்கல் செய்த மனுவை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, ஏப்ரல் 04ஆம் திகதி, டெய்லருடன் கூடிய டெக்டர், ஒரு தண்ணீர் பௌசர் மற்றும் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் அலுமினிய பாத்திரங்களை பொலிஸார் விடுவித்தனர்.

50 கிலோ அரிசி, 10 கிலோ உழுந்து உள்ளிட்ட சில உணவுப் பொருள்கள், பத்தி, கற்பூரம் உள்ளிட்ட பூஜைப் பொருள்கள் மற்றும் பூஜைக்கு பயன்படுத்தப்படும் விளக்கு, மணி உள்ளிட்ட சில பொருள்கள் என சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இன்னமும் பொலிஸாரிடமே காணப்படுகின்றன என, ஆதிலிங்கேஸ்வர ஆலய நிர்வாகசபையின் செயலாளர் துரைராசா தமிழ்ச்செல்வம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் ஊடகவியலாளர்களிடம் மேலும் தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவை மீறி இரவு விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து, வவுனியா மாவட்டம் நெடுங்கேணி பகுதியில் உள்ள வெடுக்குநாரி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இரவு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த எட்டு சைவர்கள் மற்றும் பூஜை பொருள்கள் உள்ளிட்ட உபகரணங்களை மார்ச் 8 ஆம் திகதி இரவு பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் பொலிஸாரிடம் இல்லாதமையால் வழக்கை தள்ளுபடி செய்து அனைவரையும் விடுதலை செய்து மார்ச் 19ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யத் தவறியதால், இராசரத்தினம் விநாயகமூர்த்தி (வயது 30), சுப்பிரமணியம் தவபாலசிங்கம் (வயது 35), துரைராசா தமிழ்ச்செல்வன் (வயது 28), மகேந்திரன் நரேந்திரன் (வயது 29), சிவம் லக்ஷான் (வயது 28), கந்தசாமி கௌரிகாந்தன் (வயது 24), திலகநாதன் கிந்துயன் (வயது 28) மற்றும் ஆலய பூசாரி தம்பிராசா மதிமுகராசா (வயது 45) ஆகியோரை நீதிமன்றம் விடுதலை செய்தது.

நீதிமன்ற உத்தரவை மீறி சைவ சமய வழிபாடுகளை நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை தொடர்பாக கடந்த மார்ச் 27ஆம் திகதி, கொழும்பு தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் 8 பேர் முறைப்பாடு செய்தனர்.

தவறு செய்த பொலிஸ் அதிகாரிகளை குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரும் அவர்கள், தங்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் அவமானங்களுக்கு இழப்பீடு வழங்குமாறும் தமது முறைப்பாட்டில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேலும், வெடுக்குநாரி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்காலத்தில் சுதந்திரமாக வழிபாடு நடத்த இடமளிக்குமாறும், ஆலயத்திலிருந்து பொலிஸார் எடுத்துச் சென்ற பூசை பொருள்கள் உள்ளிட்ட அனைத்து பொருள்களையும் மீள கையளிக்க ஏற்பாடு செய்யுமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (05)

# தோட்ட தொழிலாளர்களின் சம்பளப் பேச்சுக்கு இறுதி நேரத்தில் வருகைத்தராத முதலாளிமார்

## கடுமையாக எச்சரித்த செந்தில் தொண்டமான்



(ஹஸ்பர் ஏ.எச்).

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு இ.தொ.கா. தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் புதன்கிழமை சம்பள நிர்ணய சபையில் நடைபெறவிருந்த பேச்சுக்கு இறுதி நேரத்தில் முதலாளிமார் சம்மேளனம் வருகை தராது தங்களது அழற்சிய போக்கை வெளிப்படுத்தியுள்ளமைக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கடுமையாகக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்வு எட்டப்படும் நிலையில், முதலாளிமார் சம்மேளனம் பேச்சுக்கு வருகை தராது அசமந்த போக்கில் செயற்பட்டு வருகிறது.

தோட்ட தொழிலாளர்களின் விடயத்தில் உரிய தீர்வு கிடைகாவிடின் இ.தொ.கா. கடும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என முதலாளிமார் சம்மேளனத்திற்கு செந்தில் தொண்டமான் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட சம்பள நிர்ணய சபையிடம் அலட்சிய போக்கைக் கடைப்பிடிக்கும் முதலாளிமார் சம்மேளனம், தோட்டத்தில் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவார்கள் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டு. இதனால் தான் இ.தொ.கா இவர்களுடைய நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடிக்கின்றது.

இவர்களுக்கு ஒரு சதவீத மேனும் சம்பள அதிகரிப்பு வழங்குவதில் உடன்பாடு இல்லை. எனவே, தோட்ட தொழிலாளர்களின் நலன் கருதி இ.தொ.கா. முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கத் தயாராகி வருகிறது எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (05)

# தரம் ஒன்று மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகையாக தலா ஒரு லட்சம் ரூபா வழங்கல்!



(ஹஸ்பர் ஏ.எச்).

திருகோணமலை வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட திருக்கடலூர் தி/நாமகள் பாடசாலையின் தரம் ஒன்றுக்கான மாணவர்களின் வருகையில் பல வருடங்களாக வீழ்ச்சி கண்டுள்ளமையால் சமூக ஆர்வலர் இராஜகோன் பிரதீபனால் குறித்த பாடசாலைக்கு ஒவ்வொரு வருடமும் கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன.

அத்துடன் 2023 ஆம் ஆண்டில் இருந்து கல்விக்கான ஊக்குவிப்புத் தொகையாக ரூபா





100000.00 வழங்கப்பட்டு வருவதுடன் இந்த ஆண்டில் (2024) 07 மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா என்ற அடிப்படையில் மொத்தமாக ஏழு லட்சம் வங்கி கணக்குகளில் பணம் வைப்பிலிடப்படுவதுடன் வீ. செல்வராசாவை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் புதன்;கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. வரலாற்றில் இது போன்ற விடயங்கள் கல்விச் சமூகத்தை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

இதில் பாடசாலையின் அதிபர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்கள் ஆணை முக்கியம்

**ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகருமான ருவான் விஜேவர்த்தன நேற்று சியாம் நிக்காயாவின் மகாநாயக்கரை நேற்றுச் சந்தித்து ஆசி பெற்றார். அப்போது மகாநாயக்கர் இட்டப்பன தம்மாலங்கார அ–ணநாயக்க, அரசுத்தலைவரானரணில்விக்கிரமசிங்க அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் மக்களிடமிருந்து தனக்கான மக்கள் ஆணையைப் பெற்றுவிட்டால் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும் என்று வலியுறுத்தியிருக்கின்றார்.**

**அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாரா இல்லையா என்பது இன்னும் உறுதியாகாத நிலையில் மகாநாயக்கர் இந்தக் கருத்தை வலியுறுத்தியருக்கிறார். இதனை இன்னொரு பக்கமாகச் சொன்னால், எதிர்க் கட்சிகள் சொல்லிவரும் கருத்தையே மகாநாயக்கரும் அழுத்தியிருக்கிறார் என்றே சொல்லலாம். அதாவது, தற்போதைய அரசுத்தலைவருக்கும் அவரது ஆட்சிக்கும் மக்களின் ஆணை கிடையாது. எனவே அரசுத் தலைவர் பதவி மற்றும் நாடாளுமன்றம் இரண்டுக்குமே உடனடியாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்துகின்றன. பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கோ ஏனைய பொருளாதார மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பதற்கோ எந்தவித மக்களாணையும் தற்போதைய ஆட்சியாளர்களிடம் இல்லை என்பதையே எதிர்க் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன.**

**"மற்றவர்கள்பெறும்வாக்குகள்மூலம்சீர்திருத்தங்களை கொண்டு வர முடியாது," என்று மகாநாயக்கர் மேலும் தெரிவித்திருக்கிறார். ஆனால், அடுத்தவரான ராஜபக்சக்கள் பெற்ற வாக்குள் மூலம் அதிலும் தாம் ராஜபக்சக்களுக்கு வழங்கிய ஆணையை மக்கள் திரும்பபப்பெற்ற பின்னரும் வெட்கமற்ற முறையில் அதிகாரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள் என்பதே நிதர்சனம்.**

**அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே அரசியல் ரீதியாக மிகவும் முதிர்ச்சியடைந்த வேட்பாளராக இருப்பார் எனவும் அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க போன்ற வேறு வேட்பாளர்கள் இருப்பார்கள் என்றாலும் ரணிலே முதிர்ச்சியடைந்த வேட்பாளராக இருப்பார் என்று மகாநாயக்கர் கூறினார் என்றும் ருவான் விஜேவர்த்தனவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**ஆகமொத்தத்தில்ரணில்நாட்டின்தலைவராவதற்கான தகுதியைக் கொண்டிருக்கிறார் எனினும் அவர் மக்கள் ஆணையைப் பெற்ற தலைவர் அல்லர் என்பதுதான் மகாநாயக்கரின் கருத்தும்கூட என்பது இங்கு தெளிவாகின்றது. எனவே தேர்தல்களை விரைவில் நடத்தி மக்களாணையைப் பெறும் தலைவரிடம் ஆட்சி அதிகாரத்தைக் கையளிப்பது மிக முக்கியமானது. மக்களாணை இன்றி மேற்கொள்ளப்படும் எந்தவொரு பொருளாதார சீரமைப்பும் நிலையானதாகவும் மக்களுக்குப்பயனுள்ளதாகவும்அமையப்போவதில்லை. இதனைப் புரிந்துகொண்டு ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.**

**அரசுத் தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை நடத்துவதோடு மட்டுமல்லாவது மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பவற்றையும் நடத்தி, மக்கள் ஆணையைத் பெற்ற தலைமைகள் அவற்றை ஆட்சிய செய்வதற்கான வழி வகைகைளை ஏற்படுத்தவும் வேண்டும்.**

# பூனை கண்ணை மூடிக் கொண்டால்...

## என் சத்திய மூர்த்தி



அண்மையில் ஜேவிபி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திசநாயகே, யாழ்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். முன்னதாக அவர் கிளிநொச்சியில் மக்கள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்த இரு வட மாகாணப் பயணங்களுக்கும் இடையில் அவர் கனடா நாட்டிற்கும் சென்று வந்தார்.

தமிழர் பகுதிகளுக்கான அவருடைய இரண்டு பயணங்களுக்கும் இடையே கனடா நாடு சென்று வந்ததற்கும் எந்த தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் தலைவர்களின் அட்டவணையில் சில விடயங்கள் தவிர்க்க முடியாதது. அதற்கு இல்லாத அர்த்தங்களை கற்பித்துக் கொண்டால் தவறான முடிவுகளுக்கே வழி வகுக்கும்.

அநுர தென்னிலங்கையில் முக்கியமாகி உள்ள ஒருகட்சியின்தலைவர். ஜனாதிபதிவேட்பாளரும்கூட. இன்னும்சொல்லப்போனால், தென்னிலங்கையில் பல்வேறு கருத்துக்கணிப்புகள் அவர் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கட்டியம் கூறி வருகின்றன. அது சரியா–தவறா என்பதை தேர்தல் நடந்த பின்னர் அதன் முடிவே தீர்மானிக்கும்.

### முழு இருட்டடிப்பு

என்றாலும், அடுத்த ஜனாதிபதியாக வாய்ப்பு உள்ளவர் என்று கருதப்படும் ஒரு நபர் யாழ்பாணத்திற்கு வந்திருந்த விடயத்தை தமிழ் பத்திரிகைகள் கிட்டத்தட்ட முழுவதுமாக இருட்டடிப்பு செய்ததாகவே தோன்றுகிறது. அந்த நாட்களில் வெளியான யாழ் தினசரிகளை படித்து பார்க்கும் போது, அநுர என்று ஒரு நபர் இருக்கிறாரா, என்றுகூட எண்ணத்தோன்றும்

பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடுமா, என்ன? இவ்வாறு கண் மூடி செய்திகளை பகிர்வதோ, இருட்டடிப்பு செய்வதோ, பத்திரிகை தர்மம் இல்லை. அதைவிட முக்கியம், அந்தப்பத்திரிகைச்செய்திகளையேநம்பி இருக்கும் தமிழ் மக்களைக் குருடர்களாக்கி, அவர்களைத் தொடர்ந்து அரசியல் ஞான சூன்யமாகவே



வைத்திருக்க ளும் போட்டுதான் யோசித்து முடிவு செய்திருப்பபார்களோ என்று தோன்றுகிறது.

கடந்தகாலங்களில்தான்தமிழ்மக்கள்பல்வேறு அரசியல் தலைமைகளின் ஆட்டத்திற்கு ஆடி வந்தார்கள். அதில் விடுதலை புலிகள் அமைப்பு முக்கியமானது. அப்போது போலவே இப்போதும், தமிழ் பத்திரிகைகள் யாருக்கோ பயந்து, அல்லது யாரையோ மட்டும் ஆதரிப்பதாகச் செய்திகளை வெளியிடுவதாலோ அல்லது இருட்டடிப்புச் செய்வதாலோதான், இங்கே பொறுப்பற்ற சமூக வலைதளங்களின்ஆளுமைஅதீதமாகஇருக்கிறது.

### மெகா ஸ்டார்

உண்மையை சொல்லப்போனால், தமிழ் பத்திரிகைகள் அநுரவின் யாழ் பயணத்தை முழுவதுமாக இருட்டடிப்பு செய்துவிடவில்லை. அல்லது அனைத்துப் பத்திரிகைகளுமே அவ்வாறு செய்யவில்லை. ஆனால், அநுரவின் பயணத்திற்கு பத்திரிகைகளில் இடம் ஒதுக்கிய ஆசிரியர் பீடம், அதனை அவருக்காகவோ, அவரது அரசியலுக்காகவோ அல்லது அவர் ஒரு ஜனாதிபதி வேட்பாளர் என்று கருதியோ அவ்வாறு செய்யவில்லை.

மாறாக, அநுரவின்கருத்துரையாடல்நடைபெற்ற அரங்கில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பிரசன்னமாகி இருந்தார் என்ற செய்தியே அவர்களை அங்கு இழுத்தது. அநுரவின் பயணம் குறித்து அவர்கள் வெளியிட்ட செய்தியும் சுமந்திரனின் வருகை குறித்தே இருந்தது. இதில் சமூக வலைதளங்கள் போட்டி போட்டுக்கொண்டு பங்கெடுத்தன.

அந்த வகையில், சமகால தமிழ் அரசியலே, சுமந்திரன் என்ற தனி மனிதனைச் சுற்றியே வருகிறது. சுமந்திரன் ஆதரவு அல்லது எதிர்ப்பு அல்லது நடுநிலை என்பதே அதன் சார்பு. இந்த அடிப்படையிலேயே, தமிழ்ப் பத்திரிகைகளும் ஊடகங்களும் தமிழர் அரசியலையும் அது போன்றே தென்னிலங்கை சிங்கள அரசியலையும் நோக்குகின்றன.

அந்த வகையில் சுமந்திரன்தான் தமிழ் அரசியலின்மையப்பகுதி, 'மெகாஸ்டார்'. என்றாலும் தனது தமிழ் அரசு கட்சியின் தலைவர் தேர்தலில் அவர் வெற்றி பெற்றுவிடவில்லை என்பதையும் நினைவில்கொள்ளவேண்டும்.

### வரவேற்கத் தக்க விடயம்

சுமந்திரன் நினைத்திருந்தால், அநுரவைக் கொழும்பிலோ தென்னிலங்கையின் வேறு பகுதிகளிலோ அல்லது வெளி நாடுகளிலோ சந்தித்துப் பேசி இருக்கலாம். அவ்வாறு அவர் செய்திருக்கவும் வாய்ப்பும் அவசியமும்கூட ஏற்கனவே இருக்கிறது. ஆனால், பிரச்சினைக்குரிய தலைவரான அநுரவை யாழ்பாணத்தில், அதுவும் ஒரு பொது இடத்தில் வைத்து வெளிப்படையாகச் சந்தித்திருப்பது வரவேற்க தக்க விடயம். அதற்கு கண், மூக்கு வைத்து பேசுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

ஆனால், சுமந்திரன் அநுரவை சந்தித்து பேசியதில் ஆச்சரியம் இல்லை. எப்போது தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்மந்தன், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த போவதில்லை என்று அறிவித்தாரோ, அப்போதே, அந்தக் கட்சித் தலைமை மட்டுமாவது

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பூனை கண்ணை மூடிக் கொண்டால்...

4ம் பக்க தொடர்ச்சி..........

முக்கிய தென்னிலங்கை வேட்பாளர்களைச் சந்தித்து இனப்பிரச்சினை மற்றும் அரசியல் தீர்வ குறித்து பேச்சு நடத்தும் என்பது எதிர்பார்க்கப்படவேண்டிய விடயமே.

அநுரவின் கலந்துரையாடலில் பார்வையாளராக இருந்த சுமந்திரன், பின்னர் அவருடன் தனியாக ஓரிரு நிமிடங்கள் பேசினார். இது குறித்து தமிழ் ஊடங்களுக்குப் பேட்டி அளித்த அவர், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை சார்ந்த அனைத்து முக்கிய வேட்பாளர்களுடனும் தமிழ் அரசு கட்சி பேச்சு நடத்தும் என்று கூறி உள்ளார். அதில் தான் பிரச்சினையே.

திருகோணமலை நீதிமன்றத்தில் நடைபெறும் தமிழ் அரசு கட்சியின் உள்கட்சி தேர்தல் விவகாரம் குறித்த வழக்கு விசாரணையின்போது வாதிட்ட சுமந்திரன், எப்படிப் பார்த்தாலும் தன்னை எதிர்த்து போட்டியிட்ட சிறீதரனே வெற்றிபெற்றார் என்று ஏற்றுக் கொண்டிருந்தார். அவ்வாறானால், ஜனாதிபதி தேர்தல் குறித்து சுமந்திரனோ, ஏன் சம்மந்தனோகூட கருத்து தெரிவிக்க முடியாது.

அல்லது. அவர்கள் கூறும் கருத்துக்கள் தனக்கு ஏற்புடையதே என்று சிறீதரன் கூறியிருக்கவேண்டும். அவ்வாறு அவர் கூறிவிட்டால், கட்சியின் உள்கட்சிப் பிரச்சினைகள் அப்போதே முடிவிற்கு வந்துவிடும் என்றே எண்ணத் தோன்றுகிறது. பிற பிரச்சினைகளை எல்லாம் இரு தரப்பினரும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து, தீர்த்துக் கொள்ளமுடியும்.

## முன்னுதாரணம்

இனப்பிரச்சினை குறித்து தனது யாழ்பாணத்தில் உரையில் குறிப்பிட்ட அநுர, இது விடயத்தில் இந்தியாவின் முன்னுதாரணத்தைச் சுட்டிகாட்டிப் பேசினார். அதாவது, அடுத்தடுத்து சுதந்திரம் பெற்ற இரண்டு நாடுகளில் இந்தியாவில் மட்டுமே அரசியல் தெளிவு மற்றும் உறுதிப்பாடு உள்ளது என்று சாரப்படும்படி பேசினார். பல்வேறு மொழிகள் மற்றும் பல்வேறு மதங்கள் மற்றும் சாதிகள் உள்ள இந்தியாவில் சிறுபான்மையினர் நாட்டின் தலைமைப் பொறுப்புகளை வகிப்பதில் எந்தவித பிரச்சினைகளும் இல்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதாவது, இது விடயத்திலும் இலங்கை பின் தங்கி உள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றே இதனை கொள்ள வேண்டும். குறிப்பாக சம காலத்தில், ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் சிறுபான்மை மதங்களை சார்ந்தவர்கள். தற்போதைய ஜனாதிபதி திரௌபதி முர்மு, மலைவாழ் இனம் ஒன்றைச் சார்ந்தவர் என்பதையும் அநுர குறிப்பிட்டார். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இந்த வகையில் இந்தியாவின் சாதனையே அதனை உலகின் சிறந்த ஜனநாயக நாடாக அடையாளம் காட்டி உள்ளது.

திரௌபதி முர்மு இந்திய ஜனாதிபதி என்பது, இலங்கையில், வேட்டா அல்லது வேடுவர் என்று அறியப்படும் பழங்குடி இனத்தவர் ஒருவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சமம். என்ன, வேட்டா இனத்தவர், ஒரு சில ஆயிரம் பேரே இன்று உயிருடன் உள்ளனர். ஆனால், இந்தியாவில் பல்வேறு பழங்குடி இன மக்கள் கோடி கணக்கில் இன்னமும் உள்ளனர். அவர்களை யாரும் அழித்தொழித்துவிடவில்லை.

அநுராவின் இந்தக் கருத்துக் குறித்து அவருடன் உரையாடியதாகக் கூறிய சுமந்திரன், இந்தியாவின் அரசியல் உறுதிப்பாட்டுக்கும் வெற்றிக்கும் காரணம் அங்கு மொழிவாரி மாநிலங்கள் அமைந்ததுதான் என்று சுட்டிக்காட்டினார் என்று கூறியுள்ளார். இதன் காரணமாகவும் இலங்கையில் வடக்கு-கிழக்கு மீள் இணைப்பு அவசியமாகிறது என்றும் அவர் கூறி உள்ளார்.

## முக்கிய அலகு

அநுராவிடம் இந்தக் கருத்தை சுமந்திரன் முன் வைத்ததற்கு காரணம் உள்ளது என்று கருதலாம். 2006ஆ-ம் ஆண்டு உச்ச நீதிமன்றம், அரசமைப்பின் பதிமூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான வடக்கு-கிழக்கு இணைப்பை இல்லாததாக்கி உத்தரவு பிறப்பித்தது.

அந்த வழக்கை முன்னெடுத்தது, இன்று அநுர தலைமை தாங்கும் ஜேவிபி தான். எனவே, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்றால் அதில் வடக்கு-கிழக்கு இணைப்பு முக்கிய அலகு என்பதை சுமந்திரன் சொல்லாமல் சொல்லி இருக்கிறார்.

ஆனால், இந்தியாவின் மொழிவாரி மாநிலங்கள்தான், அந்த நாட்டில் அரசியல் உறுதிப்பாடு தொடர்வதற்கு முக்கிய காரணமா, என்று கேட்டால், அது குறித்து பட்டி மன்றமே நடத்தலாம். இன்னும் சொல்லப் போனால், இந்தியா போன்ற நாட்டின், நீள-அகலங்கள், மக்கள் தொகை மற்றும் பொருளாதாரம் ஆகியவை அரசியல் உறுதிப்பாட்டின் நிதர்சன காரணிகள்.

இன்றளவிலும், இந்தியாவில்கூட மதம், இனம், ஜாதி, மொழி போன்ற பல்வேறு காரணங்களால் பல விதமான பிரச்சினைகள் இன்னமும் தொடர்கின்றன. ஆனால், அவற்றை காரணம் காட்டி, யாரும் நாட்டை துண்டாட முயற்சிக்கவில்லை. மாறாக, தங்கள் பிரச்சினையின் ஆழத்தையும் தங்களது அபிலாஷைகளையும் தேசிய அளவில் வெளிப்படுத்த போராட்டங்களையும் போராளிகளையும் களமிறக்கும் பல்வேறு தரப்பினரும், முடிவில் அரசியல் தீர்வை எட்டுவதிலேயே அதீத ஆர்வம் காட்டி வந்துள்ளனர்.

காரணம், அவர்களும் தங்களது போராட்டத்தின் ஷெல்ப்-லைப், ஒரு தலைமுறையினரின் காலமான முப்பது வருடங்களே என்பதை உணர்ந்தே வைத்திருந்தார்கள். மாறாக, தந்தை செல்வா கூறியது போல், அந்த போராட்டம் அடுத்தடுத்த தலைமுறையினரால் முன்னெடுக்கப்படும் என்பதல்ல உண்மை.

இனப்பிரச்சினையில் அந்த அடுத்தடுத்த தலைமுறையினர் தான், புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அங்கிருந்து, தங்களது உறவினர்களை, தங்களது நாடுகளுக்கு அழைத்துச்செல்ல தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார்கள்.

## மேலெழுந்தவாரியாக...

வடக்கு -கிழக்கு மீள் இணைப்பு குறித்து சுமந்திரன் கூறிய விடயம் மேலெழுந்தவாரியாக சாத்தியமானது. ஆனால், கிழக்கில் முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டே அந்த மீள் இணைப்பு குறித்து பேசுவற்கோ அல்லது பேச்சு நடத்துவதற்கோ முயல வேண்டும். அப்போதுதான் அது குறித்த எந்தவித முன்னெடுப்புகளுக்கும் முயற்சிகளுக்கும் எதாவது அர்த்தம் இருக்கும்.

இது குறித்து எல்லாம், அநுர தெரிந்து வைத்திருக்கிறாரோ இல்லையோ, சுமந்திரன் உள்ளிட்ட தமிழர் அரசியல் தலைமைகள் களநிலையை மறந்து விடக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், முஸ்லீம் மக்களுக்கும் அப்பால் சென்று, மீள் இணைப்பு குறித்த சம கால கிழக்கு வாழ் தமிழ் மக்களின் எண்ணவோட்டம் என்ன என்பதையும் அவர்கள் அறிந்து, தெரிந்த, பின்னரே அது குறித்து பேச வேண்டும்.

காரணம், சுமந்திரனின் கூற்றை வைத்து பார்த்தாலும், இந்தியாவிலும் தமிழ் பேசும் பகுதிகளாக தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்கள் உள்ளன. தங்களுக்கு தனி மாநில அந்தஸ்து கோரும் புதுச்சேரி அரசியல்வாதிகள், தங்களது பிரதேசத்தை, தமிழ் நாட்டுடன் இணைப்பதற்கு உடன்பட்டதே இல்லை.

இன்னும் சொல்லப்போனால், அண்டை மாநிலமான ஒன்றுபட்ட ஆந்திர பிரதேசத்தில் இருந்துதான், அதே தெலுங்கு மொழி பேசும் தெலுங்கானா மாநிலம் உருவானது. அது போன்றே, சத்திஸ்கர், ஜார்கண்ட், உத்திரகண்ட் போன்ற சிறிய மாநிலங்களும்கூட அந்தந்த மக்களின் அபிலாஷைகளின் காரணமாகவே பெரிய மாநிலங்களில் இருந்து பிரிக்கப்பட்டு புதிதாக உருவாயின.

இவை எல்லாம் இப்படி என்றால், இந்தியாவின் வட-கிழக்கே, மிஸோரம் போன்ற குட்டி மாநிலங்களில் அடுத்தடுத்த கிராமங்களில்கூட ஒரே மொழி பல்வேறு பேச்சுவழக்கை பெற்றுள்ளது. அதை விட முக்கியமாக, ஒரு கிராமத்தில் பேசப்படும் மொழியை தொட்டடுத்த கிராம மக்களால் புரிந்து கொள்ளமுடியாது. அப்போது அவர்களுக்கு கைகொடுப்பது, ஆங்கிலமோ, அல்லது வங்காள மொழியோ அல்லது, இந்தியோதான்!

அந்த விதத்தில், மீள் இணைப்பு குறித்த சுமந்திரனின் விவாதங்களும் நியாயங்களும்கூட பூனை கண்ணை மூடிக்கொண்ட கதைதான்...

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உள்ளாட்சித் தேர்தலைப் பிற்போடுவது எதேச்சாதிகாரத்திற்குச் சமமானது

## முன்னாள் ஆணையாளர் மகிந்த தேசப் பிரிய கண்டனம்



தேர்தல்களைப்; பிற்போடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் முன்னாள்தேர்தல்ஆணையாளர்தனது வீட்டின் முன்னால் பதாதையொன்றை காட்சிப்படுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள மஹிந்த தேசப்பிரிய அரசாங்கத்தின் செல்வாக்கு காரணமாக வேட்புமனுக்களைக் கோரிய பின்னர் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு எதேச்சதிகாரத்துக்குச் சமமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளிற்கு பதில் அதிகாரிகள் நிர்வாகம் செய்வது பிரஜைகளின் உரிமையை மீறும் செயல் என தனது வீட்டின் முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாதையில் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.(05)

# நெடுந்தீவின் முன்னேற்றத்திற்கு டக்ளஸால் விசேட நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு பிரதேசத்தில் சுற்றுலாத் துறையை விருத்தி செய்தல் மற்றும் பிரதேசத்தின்உட்கட்டமைப்புவசதிகளை மேம்படுத்தல்உட்படபல்வேறுவிடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே குறித்த விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதலைமையில்இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அதேபோன்று பிரதேசத்தின் முன்னேற்றத்திற்குஅத்தியாவசியமான கடல்போக்குவரத்து, வீதிப் போக்குவரத்து, விவசாயம், கடற்றொழில், கால்நடை அபிவிருத்தி, நீர்பாசனம், உட்பட பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போதுகருத்துதெரிவித்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலமைகளையும் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அறிந்து கொண்டதாகவும், ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நெடுந்தீவிற்கான விசேட நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்

கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# போலி முகநூல் கணக்குகள் தினசரி 200 முறைப்பாடுகள்

தங்களது பெயரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் போலி முகநூல் கணக்குகளை அகற்றுமாறு கோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு தினசரி 200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன எனக் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தர்ஷிகா குமாரி ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், போலி முகநூல் கணக்குகளை அகற்றுமாறு கோரி கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டதா என்பது தொடர்பில் கண்டறிய முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் சுமார் 1,500 முறைப்பாடுகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளின் படி பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (05)

# இன்று வெள்ளிக்கிழமை தபால் சேவை நடக்கும்!

## அமைச்சர் சாந்த பண்டார தகவல்



வெளிநாடுகளிலிருந்து இலங்கையிலுள்ள வர்களுக்கு பெருமளவான பொதிகள் அனுப்ப ப்பட்டுள்ளன. எனவே அவற்றைஉரியநேரத்தில்உரியவர்களிடம் சேர்க்க வேண்டும் என்பதால் இன்றும் தபால் சேவையை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தபால் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதிஊடகமையத்தில்இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

வெளிநாடுகளிலிருந்து இலங்கையிலுள்ள தமது உறவினர்களுக்கு பெருமளவான பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றை உரிய நேரத்தில் உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதால், இன்று விடுமுறை என்ற போதிலும், அன்றைய தினம் சேவைக்கு சமுகமளிப்பதற்கு சகல தபால் ஊழியர்களும் தீர்மானித்துள்ளனர். இதற்குரிய ஒத்துழைப்பைவழங்குவதாகசுங்கதிணைக்களமும் உறுதியளித்துள்ளது.

நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த தபால் திணைக்களம் தற்போது இலாபமீட்டத் தொடங்கியுள்ளது. எனினும் அத்தியாவசிய சேவைகளில் காணப்படும் ஆள் பற்றாக்குறை இந்த பயணத்துக்கு தடையாகவுள்ளது. எனவே அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இலங்கை மனித வள முகாமைத்துவத்தில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் ஆலோசனை குழுக்களிடம் இது தொடர்பில் பல கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றோம்.

அதற்கமைய உள்ளக இடமாற்றங்களை வழங்குமாறும்யோசனைமுன்வைத்திருக்கின்றோம். காரணம் அரச சேவைகளில் சில இடங்களில் தேவைக்கதிகமான ஊழியர்கள் உள்ளனர். மறுபுறம் தேவையான இடங்களில் பற்றாக்குறை நிலவுகிறது. - என்றார். (05)



# காரைதீவு பிரதேச செயலக அணி கயிறிழுத்தல் போட்டியில் முதலிடம்



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறைமாவட்டவிளையாட்டுவிழாவின்கயிறு இழுத்தல் போட்டிகள் காரைதீவில் இடம்பெற்றன.

காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்ற போட்டியில், ஆண்கள் பிரிவில் காரைதீவு பிரதேச செயலக அணி வெற்றிபெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டது.

இரண்டாமிடத்தை கல்முனை வடக்கு பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

பெண்கள் பிரிவில் அம்பாறை பிரதேச செயலக அணி முதலிடத்தையும் இரண்டாமிடத்தை தமன பிரதேச செயலக அணியும் பெற்றுக் கொண்டன. (05)





# கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆளுமைகள் ஐவருக்குக் கௌரவம்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்றுச்செல்லும் இரு ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு செவ்வாய்க்கிழமை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.



இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிருவாக சேவை அதிகாரிகளான பீ. ஜிஹானா ஆலிப் (கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர்), யூ.எல். சாஜித் (உதவிக்கல்விப் பணிப்பாளர்- உடற் கல்வி மற்றும் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்), என்.எம்.ஏ.மலீக்(உதவிக் கல்விப் பணிப்பாளர்- ஆங்கிலம் மற்றும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர்) ஓய்வு பெறும் இரு ஆசிரிய ஆலோசகர்களான சீ. செல்வராஜா (விவசாயம்), எம்.எஸ். சஹ்துல் அமீன் (விஞ்ஞானம்) ஆகியோர் பாராட்டி, நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், எம்.எச். றியாஸா, என். வருண்யா, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. சன்ஜீவன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு விஷேட உரைகளையும் ஆற்றினர்.

நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் நடந்தேறிய இந் நிகழ்வை ஆசிரிய ஆலோசகர் ஏ.றாஸிக் நெறிப்படுத்தியத்துடன் ஆசிரிய ஆலோசகர்களான ரீ.கே. பத்திரன, எம். லக்குணம் ஆகியோரும் விடைபெறும்அதிதிகள்தொடர்பில்சிறப்புரையாற்றினர். (05)

# காதலி இறந்த சோகத்தில் காதலனும் உயிர்மாய்ப்பு

## யாழ்ப்பாணத்தில் துயரம்

காதலி ஒருவர் தூக்கிட்டு இறந்து 50 ஆவது நாளில் செவ்வாய்க்கிழமை காதலனும் தூக்கிட்டுதற்கொலை செய்த சம்பவம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

சிங்காவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த கதிர்காமலிங்கம் கோபிசன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் –

குறித்த இளைஞரின் காதலியான தெல்லிப்பழை பகுதியைச்சேர்ந்த யுவதி ஒருவர் கடந்த 50 நாள்களுக்கு முன்னர் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். இந்நிலையில் குறித்த இளைஞன் செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். (05)

# சம்மாந்துறை வலயத்தில் நூல் வெளியீட்டு விழா



( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் வருடாந்த அமுலாக்க திட்டம் என்ற நூல் வெளியீட்டுவிழா திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா தலைமையில் நடைபெற்றது.

பிரதமஅதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் செய்யட் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

இந்நூல் வெளியீட்டுவிழாவில் சம்மாந்துறை வலயக்கல்விப்பணி மனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத் மொகைடீன் ,திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், அப்துல் மஜீத், எச் .நைரூஸ் கான்,கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.நசீர், பி.பரம தயாளன், யூஎல்.மகுமூட்லெவ்வை, கணக்காளர் சீ.திருப்பிரகாசம், ஆசிரியர் பயிற்சி நிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன், பாடசாலை வேலைகள் அதிகாரி இ.ஏகாம்பரநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வலய வருடாந்த அமுலாக்கத்திட்ட கைநூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

விழாநிகழ்வுகளை உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் வளவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(05)

# வசதி குறைந்த மாணவர்களுக்கு 'ஒஸ்கார் ' பாதணிகள் வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவிலுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம்'ஒஸ்கார் ' ஒரு தொகுதி பாதணிகளை வழங்கி வைத்தது.



காரைதீவு விக்னேஸ்வரா வித்தியாலயம், விஷ்ணு வித்தியாலயம் மற்றும் கண்ணகி இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்குஇணங்கஇந்நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் விபுலமாமணி தேசமான்ய வி.ரி.சகாதேவராஜாகலந்துசிறப்பித்தார்.

லண்டனில்வாழும்காரைதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி கருணாநிதி, வேலுப்பிள்ளைஉதயகுமார்ஆகியோர் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தனர்.

ஒஸ்கார் சார்பில் ஆசிரியர்களான கே.லோகநாதன் , இ.இரத்தினகுமார் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

குறித்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இவ்வுதவியை நல்கிய ஒஸ்கார் அமைப்பிற்கு நன்றிகளைத்தெரிவித்துக்கொண்டனர்.

மேலும்சஜானந்த் உள்ளிட்ட சிறப்பு அதிதிகளும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir




# புத்தாண்டு மலர்கிறது.. புதியன பிறக்கட்டும்...புதுமைகள் நிகழட்டும்..

**1. எப்போது ?**

எதிர்வரும் 13.04.2024 சனிக்கிழமை இரவு வாக்கிய பஞ்சாங்கப்படி இரவு 8.15க்கு திருக்கணித பஞ்சாங்கப்படி இரவு 9.04 மணிக்கு

**2. புத்தாண்டுப் பண்டிகை எப்போது ?**

இரவில் வருடம் பிறப்பதால் மறுநாள் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமையே எங்களுக்கு சித்திரை முதல் நாள். அன்று தான் பண்டிகை .. பொங்கி வழிபடவும் உரிய நாள் இதுவே..

**3. மருத்து நீர் வைத்து நீராடும் புண்ணிய காலம் எது ?**

13.04.2024 மாலை 5மணிக்கு விஷு புண்ணிய காலம் தொடங்குகிறது. எனவே அப்போது மருத்து நீர் வைத்து நீராடி வருஷம் பிறக்கும் போது வழிபாடு செய்யலாம்.

**4. இந்த ஆண்டுக்கு ஆடைக்கு என்ன நிறம் சொல்லப்பட்டிருக்கிறது ?**



வெண்பட்டு அல்லது நீல நிறப்பட்டாடை



**5. இந்த வருஷ பெயர் என்ன ?**

குரோதி. இது 60 வருட சுற்றோட்டத்தில் 38ஆவது வருடம்.

**6. இந்த ஆண்டு பெயர்ப் பலன் என்ன ?**

இதற்கு அதிக முதன்மை தேவையில்லை என்பது எனது தனிப்பட்ட எண்ணம். அது 60 வருடப்பொது வெண்பாவே. நடைமுறையில் இதற்கு மாறி நடக்க கண்டுள்ளேன்.

இலங்கைத் தமிழனாக நல்ல பெயர் கொண்ட ஆண்டுகள் எங்களுக்கு ஏதும் தந்தனவா?

இம்முறை கூட வெண்பா பலனும் வருஷாரம்ப ஜாதக பலனும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது. (வாக்கியம் 31ஆம் பக்கம் பார்க்க)

எனவே இந்த குரோதி ஆண்டு தீமைகளுக்கு குரோதியான வருடமாகட்டும்! நன்மைகளை விளைவிக்கட்டும் என்று நேரிய சிந்தனையுடன் இறைவனிடம் வேண்டுவோம்.

**7. கை விசேஷ நேரம் என்ன ?**

இம்முறை சிறப்பே முதல் நாளே (14.04.2024) நல்லநாள். அன்று காலை 7.57 முதல் பகல் 12 மணி வரை

பிறகு மாலை 6.20 முதல் 8.17 வரை

15.04.2024 திங்கள் காலை 6 மணி முதல் 7.25 வரை 10 மணி முதல் 12மணி வரை

**8. விருந்தூண், விவசாய ஆரம்பம் இவற்றுக்கு..**

பொதுவாக இதே நேரங்களைப் பயன்படுத்தலாம்.

**9. தொழில் ஆரம்பிக்கவும், கல்வி, கலை முயற்சி ஆரம்பிக்கவும்..**

பொதுவாக இதே நேரங்களைப் பயன்படுத்தலாம். 14.04.2024 திங்கட்கிழமை பகல் 12 மணிக்குள் நன்று. திருக்கணிதப்படி 12.12 க்குப் பிறகு அஷ்டமி வருவதால் அதற்கு முன் செய்வது நன்று.

**10. இந்த புத்தாண்டு சிறப்பு என்ன ?**

எமது வருஷம் சூரியனை பிரதானமாக கொண்டு கணிக்கப்படுவது. அதாவது சௌரமான வருஷாரம்பம்.

அதை விட இந்த உலகின் ஆதார சக்தியே சூரியனே. விஞ்ஞானம் என்ன சொன்னாலும் சூரியனின் ஆதாரத்திலேயே இப்பிரபஞ்சம் இருக்கிறது.

இந்த ஆண்டின் முதல் நாள் சூரியனுக்கு உகந்த பானு வாரம் (ஞாயிற்றுக்கிழமை). அன்று அந்த சூரிய தேவருக்கு சிறப்பான சப்தமியும் சேர்ந்து பானு சப்தமி என்ற புண்ணிய நாள் ஆகிறது.

**11. ஐரோப்பியா, கனடா நாடுகளில் எப்போது புத்தாண்டு ?**

எங்களுக்கு இலங்கையில், 13.04.2024 சனிக்கிழமை இரவில் சூரியன் மறைந்த பின் புத்தாண்டு பிறக்கிறதால் மறுநாள் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை தான் புத்தாண்டு.

ஆனால், அந்தசூரியன்மேஷராசிக்குள் பிரவேசிப்பதாக காட்சி தரும் புத்தாண்டு ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சூரியன் மறைவதற்கு முன் , மாலையில் நிகழ்வதால் 13-04-2024 சனிக்கிழமை அன்றே அங்கு புத்தாண்டை கொண்டாடலாம்.

அதே வேளை அவுஸ்ரேலியாவில் - சிங்கப்பூரில் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை அன்றே சித்திரை முதல் நாள் புத்தாண்டு ஆகும்.

இது என்ன ஒரு இடத்துக்கு ஒரு நாள் ? என்று கேட்டால் உலகம் சுற்றுகிறது. ஒரு இடத்தில் இரவு இன்னொரு இடத்தில் பகலாகிறது என்பதால் ஜோதிடப்படி இவை இப்படித்தான்..

ஆனாலும், அவர்களும் இந்த இந்தியா - இலங்கை ஆகியபாரததேசத்தையேதாயகமாககொண்டவர்களாதலில் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடினும் தவறல்ல என்பதும் எனது தாழ்மையான எண்ணம்.

'இறைவன்திருவருள்எம்மைவழிநடத்தவேண்டுவோம்'

**அன்புடன்,**
**மயூரகிரிக்குருக்கள்**

## தேவாரம்

பாடல் எண் : 1

**உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் .**

பொழிப்புரை:

எவ்வுயிர்களானும் தம்மறிவால் உணர்தற் கும் ஓதுதற்கும் அரியவனாயும், அங்ஙனம் அரியவனாயினும் தன்னை அடைந்து உய்ய வேண்டும் எனும் பெருங்கருணையினால் பிறைச் சந்திரன் உலாவுதற்கும், கங்கையைத் தாங்குதற்கும் இடனாயுள்ள திருச்சடையை உடையனாயும், அளவிறந்த ஒளியுரு உடையனாயும், தில்லைச்சிற்றம்பலத்தே திருக்கூத்து ஆடுகின்றவனாயும் உள்ள கூத்தப் பெருமானின், அன்பர்கள் உள்ளத்தில் என்றும் மலர்ந்து நிற்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்தி வணக்கம் செய்வாம்.

# சுண்ணக்கல் அகழ்வால் மக்களுக்கு பாதிப்பு வரும் என ஆய்வறிக்கை கூறினால் அகழ்வுப் பணி நிறுத்தப்படும்

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்



பொன்னாவெளி பகுதியில் ஆய்வின் முடிவில் சுண்ணக்கல் அகழ்வால் மக்களுக்கு பாதிப்பு வரும் என ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றால் அகழ்வு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என ஆய்வறிக்கை கிடைத்தால், அகழ்வு பணிகளுக்கான நடவடிக்கைகள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்..

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

நீண்டகாலமாக என் மீதான அவதூறுகளை பரப்பும் செயற்பாட்டில் தமிழ் கட்சிகள் செயற்படுகின்றன. அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் இவ்வாறான சேறு பூசல்கள் மூலம் என்னை துரத்தலாம் என சிலர் நினைக்கிறார்கள். புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனாலையே என்னை துரத்த முடியவில்லை என்ற நிலையிருக்கும்போது சில குடிகாரர்களால் என்னால் துரத்த முடியாது.

இதேவேளை பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு தொடர்பான திட்டம் நீண்ட காலத்திற்கு முன்னரே முன்னெடுக்கப்பட்ட திட்டம்.

அதுமாத்திரமல்லாது கடந்த உள்ளூராட்சி தேர்தல் கால பகுதியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட அந்த திட்டம் குறித்து குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது பொன்னாவெளியை சூழவுள்ள மக்கள் மத்தியில் சில குழப்பங்கள் உள்ளன. அவற்றை மக்களுடனான சந்திப்பின் ஊடாக கேள்வி பதில் முறையான கலந்துரையாடலை நடத்தவே குறித்த தினத்தன்று அங்கு சென்றிருந்தோம்.

குறிப்பாக சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கையின் சாதக பாதக தன்மை தொடர்பிலான ஆரம்ப ஆய்வு பணிகளுக்கான 12 திணைக்களங்களை சேர்ந்தவர்களுடன் சென்ற போதே சில அரசியல்வாதிகளின் ஏவலாளர்கள் அன்றைய தினம் குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தனர்.

அன்று அங்கு கதைக்க கூடிய நிலையில யாரும் இருந்திருக்கவில்லை. சிலர் தமது அரசியலுக்காக வந்திருந்தார்கள். மற்றையவர்கள் போதையில் நின்றார்கள். அதனால் அவர்களோடு கதைக்க முடியாது என திரும்பி வந்தேன். மீண்டும் செல்வேன். மக்களின் வாழ்வாதரத்திற்காகத் தொடர்ந்து பயணிப்பேன்.

இதேவேளை சுண்ணக்கல் அகழ்வுக்கான அனுமதிகள் வழங்குவதற்கான படிமுறைகள் உண்டு. அவற்றின் ஒரு கட்டமாகவே ஆய்வு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆய்வின் முடிவில் சுண்ணக்கல் அகழ்வால் மக்களுக்கு பாதிப்பு வரும் என ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றால் அகழ்வு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆய்வறிக்கையில் மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என கூறப்பட்டால் அகழ்வு நடவடிக்கைக்கான பணிகள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

ஆனால் அங்கு வாழும் சூழலுக்கேற்ற வகையிலான குடி நீர் முழுமையாக அற்றுவிட்டது. நிலப்பரப்புகள் எல்லாம் உவர் நிலமாக மாறிவிட்டன. அதனால் எதுவிதமான பயிர் செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியது. இதனால் யுத்தம் நிறைவுக்கு வருவதற்கு முன்னரே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தனர் எனத்தெரியவில்லை.

அதுமட்டுமல்லாது சுண்ணக்கல் அகழ்வதற்கான திட்டம் உடனடியாக முன்னெடுக்கப்படும் விடயம் ஒன்றல்ல. அதுமட்டுமல்லாது மக்களது கருத்துக்களும் அதில் உள்வாங்கப்படும். அதேநேரம் குறித்த பகுதியை ஆய்வு செய்தால்தான் அங்கு குறித்த செயற்பாட்டை முன்னெடுக்கலாமா அல்லது கைவிட வேண்டுமா என்ற நிலைக்கு வரமுடியும்.

குறிப்பாக ஆய்வுகளின் பெறுபேறுகள் சென்றபோது திட்டமிட்டவகையில் சில விசமிகள் அதை தடுக்கின்றனர். இதேநேரம் ஆய்வு செய்தால் தான் ஒரு நிலைப்பாட்டை எட்டமுடியும். மாறாக ஆய்வின் முடிவுகள் பாதகமாக வருமாயின் அதைத் தடுப்பதற்கும் பின்னிற்கமாட்டேன்.

மக்களுக்கு ஏதாவதொரு அபிவிருத்தி அல்லது பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்க வரும் சந்தர்ப்பங்கள் அல்லது ஏதுநிலைகள் வரும்போதெல்லாம் இதர தமிழ் தரப்பினர் அவற்றை தடுக்கத்தான் முயற்சித்தார்களே தவிர, அதை ஆராய்ந்து சிறப்பான தீர்மானங்களை எடுப்பதற்கு ஒருபோதும் முன்வருவதில்லை.

குறிப்பாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக கிடைத்த 13 ஆவது அரசமைப்பின் ஊடாகத்தான் எமது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு ஓர் ஆரம்பமாக அமையும் என நான் அன்றிலிருந்து கூறிவருகின்றேன்.

ஆனால் அதை கடுமையாக எதிர்த்தார்கள். நடைமுறைக்கு கொண்டுவர விடமாட்டோம் என கூச்சலிட்டார்கள். ஆனால் இன்று அவ்வாறு கூச்சலிட்டவர்களே 13 தான் ஒரே வழி என இன்று முணுமுணுக்கின்றார்கள்.

இதேபோன்றுதான் இந்த பொன்னாவெளி விவகாரத்திலும் நான் மக்களுக்கு சாதகமான நன்மை விளைவிக்கும் ஒன்றுதான் என கருதுகின்றேன்.

அதேநேரம் பாதகம் என்று ஆய்வுகள் தெரிவித்தால் அதை நிறுத்துவதற்கும் பின்னிற்கமாட்டேன் என்றும் தெரிவித்திருந்த அமைச்சர் பொன்னாவெளியில் குடியேறுவதற்கு மக்கள் முன்வருவார்களாயின், அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தினை ஏற்பாடு செய்து வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# பொன்னாவெளியை பூர்வீகக் கிராமம் என்று கூறுவோர் அங்கு குடியேற வருவார்களாயின் ஏற்பாடுசெய்ய தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

பொன்னாவெளி கிராமத்தை பூ ர்வீகக் கிராமம் என்று கூறுகின்றவர்கள், அங்கு குடியேறுவதற்கு முன்வருவார்களாயின், அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை ஏற்பாடுசெய்து வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் செயலகத் தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் -

பொன்னாவெளி பிரதேசத் தில் இருந்து தற்போதுதான் மக்கள் வெளியேறினர் என ஒரு பொய்யான கருத்'து வெளியிடப்பட்டு வருகின்றது. ஆனால் அதில் உண்மை கிடையாது. மக்களை அங்கு வாழ விடாது எவரும் தடுக்கவில்லை.

(05)

# சாவகச்சேரியில் திருட்டுப்போன மோ.சைக்கிள் மன்னாரில் மீட்பு

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி பொலிஸாரின் துரித முயற்சியால் மன்னாரில் வைத்து மீட்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெறச் சென்ற ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை அங்கு நிறுத்தி விட்டுச் சென்ற நிலையில் திரும்பிவந்து பார்த்த போது அவரது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர் சாவகச்சேரிப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட் டைப் பதிவு செய்துள்ளார்

இதன்போது , விரைந்து செயற்பட்ட சாவகச்சேரிப் பொலிஸாரால் பொலிஸ் நிலையங்களுக்கும் சோதனைச் சாவடிகளுக்கும் தகவல் வஅித்தோடு, மன்னார் சோதனைச் சாவடியில் வைத்து மோட்டார்சைக்கிள் மீட்கப்பட்டதுடன், மோட்டார் சைக்கிளைத் திருடியவரும் கைது செய்யப்பட் டுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
GET IT ON Google Play
Download on the App Store
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

# ஒன்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு குச்சவெளி ஊடகவியலாளர் கௌரவிப்பு



(எச்.எம் ஹலால்தீன் )

திருகோணமலை குச்சவெளி கே. வீ. சீ ஊடகத்தின் 09 ஆவது ஆண்டின் பூர்த்தியை முன்னிட்டுஊடகவியலாளர்களின்ஒன்றுகூடல்திருகோணமலையில் இடம் பெற்றது.



மேற்படி நிகழ்வு திருகோணமலை நிலாவெளி ஹைப்ரிட் ஹோட்டலில் கே. வீ. சீயின் பணிப்பாளர். ஏ. ஆர். முஸம்மில்தலைமையின்கீழ் நடைபெற்றது.

தலைமை உரையினை பணிப்பாளர் ஏ. ஆர். முஸம்மில் சமூக வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு என்னும் தலைப்பின் கீழ் உரையாற்றினார். இதன் போது ஊடகத்தின் முக்கியத்துவமும் அதன் பங்கும் அளப்பரியது என்பதை சுட்டிக்காட்டினார்.

எமது ஊடகத்தின் வெற்றிக்காக உழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறினார்.

செயலாளர் ஏ. ஏ. றியாஸ் கே.வீ.சீ ஊடகத்தின்



09 வருட கால சவால்களையும் வெற்றிகளையும் பற்றி தெளிவுபடுத்தி அந்த பயணத்தில் தொடர்ந்து பயணித்த நிர்வாகிகளை கௌரவப்படுத்தி நன்றி தெரிவித்தார்.

நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளர்களுக்கான கௌரவிப்பும் பரிசளிப்பும் நடைபெற்றது. (05)

# சிறு விவசாயத் தொழில்களை வலுப்படுத்தும் திட்டம் நிறைவு



மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சிறு விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் வீட்டு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல் நிகழ்ச்சி திட்டம் 1500 பெண்களின் பங்களிப்புடன் வவுனியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.





2023 இல் பல்ம் அமைப்புடன் இணைந்து, ஜப்பானிய துணை பட்ஜெட் உதவியின் கீழ், குடும்ப ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் 'மேம்படுத்தப்பட்ட உணவு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக சிறு விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் வீட்டு சார்ந்த விவசாயத் தொழில்களை வலுப்படுத்துதல்' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டம் வவுனியா, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிக்குளம் ஆகிய 03 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 52 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 1500 பெண்கள் பயனடைந்தனர். இந்ததிட்டத்தில்30,000 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் மாதாந்தம் 288,000 முட்டை உற்பத்தியை காணமுடிகிறது. இதுவரை, இருபது விவசாயிகள் மற்றும் இருபது பொருத்தமான நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இருபது ஏக்கர் பரப்பளவில் தொடர்ந்து கோழித்தீன்களை வழங்குவதற்காக சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

மேலும் யுஎன்டிபி அதற்கான விதைகள் மற்றும் நீர்ப்பாசனமுறைகளைவழங்கியது. அனைத்துஇருபது விவசாயிகளுக்கும் சோளப்பயிற்செய்கை செய்வதற்காக 150 கிலோ சோள விதைகள் விநியோகிக்கப்பட்டன. இருபது விவசாயிகளும் சோளம் பயிரிட்டு 12,500 கிலோ சோளத்தை தங்கள் பயிற்செய்கை மூலம் பெற்றனர். இதன் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன், பொருளாதார மீட்சியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் நிறைவு விழா வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பி.எம.ஏ.கே.குமார, பல்ம் நிறுவன செயற்றிட்ட முகாமையாளர் சுனில் தொம்பேபொல, திட்ட முகாமையாளர் தமித் சந்திரசேகர, கள ஒருங்கிணைப்பாளர் கீர்த்திகா விஜயசுந்தர, யுஎன்டிபி நிறுவன உறுப்பினர்கள் மற்றும் இத்திட்டத்தில் பணியாற்றிய அரசாங்க, நிறுவன உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணியாற்றிய பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர்கள், செயற்றிட்டத்தின் முகாமையாளர், யுஎன்டிபி நிறுவன உறுப்பினர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அரசாங்க மற்றும் நிறுவன உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்தச் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளரால் செயற்றிட்ட பெறுபேறுகள் தொடர்பாகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் இச்செயற்றிட்ட வெற்றிக் காணொளிகள் காண்பிக்கப்பட்டு தேசிய கீதத்துடன் நிறைவு பெற்றது.(05 - 100)

# பரசூட் முறையிலான நெற்செய்கை கொக்கட்டிச்சோலையில் ஆரம்பம்



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலைய பகுதியில் விவசாய போதனாசிரியர் என். பார்த்தீபன் தலைமையில் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும்



வயல்விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பரசூட் முறையிலான நெற்செய்கையின்நன்மைகள்பற்றியதெளிவான விளக்கங்களுடன் பரசூட் முறையில் பயன்படுத்தப்படும்தொழில்நுட்பங்கள் என்பனமுறையானசெய்துகாட்டல்கள் மூலம்விவசாயபோதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக உதவி விவசாய பணிப்பாளர்களான திருமதி நித்தியா நவரூபன், எஸ்.சித்திரவேல்பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி லாவண்யாசெந்தீபன்,லக்ஸ்மன்,மாறன் ஆகியோருடன் தெற்கு வலய விவசாய கொக்கட்டிச்சோலை விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஏற்கனவே பரசூட் தட்டுக்களில்இடப்பட்ட நாற்றுகள்நடுகை செய்யப்பட்டமையும்குறிப்பிடத்தக்கது.

பரசூட் முறையிலான நெற்செய்கையின் போது எமது செலவைக் குறைத்து அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக ஓர் ஏக்கருக்கு 8-12 கிலோ விதைநெல் போதுமானதுஎன்பதால்மிகக்குறைந்த செலவே ஏற்படும்.

எனவே விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிகவருமானம்ஈட்டுவதற்குவிவசாய திணைக்களத்துடன் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என பிரதி விவசாய பணிப்பாளரும் தன்னுடைய உரையில் கேட்டுக்கொண்டார்.(05)

# புத்தாண்டை முன்னிட்டு கிராம பிரதேசங்களில் இலவசமாக கற்றல் உபகரணங்கள் வழங்கல்!



(வி.ரி.சகாதேவராஜா)

புத்தாண்டை முன்னிட்டு இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள மண்டூர் 35, கண்ணன் பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களுடைய 52 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர். தெ.பேரின்பராசா தலைமையில் இடம்பெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்க கூடாது என்று 'ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உதவியை வழங்கி வருகின்றது.

மேலும் இந் நிகழ்வில் ஆசிரியர்களான ந. நவகுமார், திருமதி. கி. விலோஜினிமற்றும்இணைந்தகரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான, ஏஎம்.ரிஸ்வான், சி.காந்தன், சி. துலக்சன் ஆகியோர் கலந்துகொண்டு 52மாணவர்களுக்கானபாடசாலைக்கு செல்வதற்கான கற்றல்உபகரணங்கள் மற்றும்தண்ணீர்போத்தல்கள்என்பன வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# யுக்தி சஞ்சிகை வழங்கி வைப்பு



(அபு அலா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தொடராக வெளியிட்டு வரும் 'யுக்தி' இலக்கியச் சஞ்சிகையின் 08 ஆவது இதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பான் கலந்துகொண்டு 'யுக்தி' இலக்கியச் சஞ்சிகையின் 08 ஆவது இதழை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இச்சஞ்சிகையை பெற்றுக் கொண்டனர். (05)

## நாவிதன்வெளியில்

# சமுர்த்தி அபிமானி புத்தாண்டுச் சந்தை



நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி புத்தாண்டு சந்தை நாவிதன்வெளி பிரதேச செயலக திறந்த வெளியில் நடைபெற்றது.



புத்தாண்டுகொண்டாட்டத்திற்காக தயாராகிவரும் பொதுமக்களுக்கு தேவையான பொருள்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பிரதேச செயலகங்கள் ரீதியாக 'சமுர்த்தி அபிமானி' புத்தாண்டு சந்தையை நடத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் எஸ்.சிவம் தலைமையில் இடம்பெற்ற புத்தாண்டு சந்தை ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா உட்பட சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். அதிதிகள் வியாபார நிலையங்களைத் திறந்து வைத்ததுடன், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களையும் பார்வையிட்டனர். இங்கு கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு உற்பத்தி பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)




# ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ நூல் ‘பேர்த்’ நகரில் வெளியீடு

மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ வெளியீட்டு விழா எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் நடைபெறவுள்ளது.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே. அவரின் நினைவாக இந்நூல் வெளியீடு, ஹில்வியூ இன்டர்கல்ச்சுரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில், 01-06-2024 மாலை 3.30 முதல் 5.30 வரை நடைபெறும். 1 ஹில் வியூ பிளேஸ், பென்ட்லி, மேற்கு ஆஸ்திரேலியா எனும் முகவரியில் நடைபெறும்.

மூத்ததமிழ்எழுத்தாளர், இலக்கிய ஆர்வலருமான டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்நூல் வெளியீடு நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும்தனக்கெனப்பலமுத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.

இந்நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம்செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றுவார். அத்துடன் டாக்டர். சி. பாஸ்கரநாதன் அவர்களும் இந்நூல் பற்றி சிறப்புரை ஆற்றுவார்.

தினகரனில்தொடங்கியகலாசூரிசிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இதன் பின் பேர்த் மாநகரில் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் புகழ் பெற்ற பாடகரும், இலக்கிய ஆர்வலருமான ராஜன் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெறும்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம்ஆண்டுநினைவாக‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும் நூல் பேர்த் மாநகரில் வெளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரனில்தொடங்கியகலாசூரிசிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக (08-08-2003) ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும்நூலை‘ஐங்கரன் விக்கினேஸ்வரா’ தொகுத்துள்ளார்.

(05)

# சுதந்திரத்தை எமக்கு எவரும் எழுதித் தரவேண்டியதில்லை

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் இடித்துரைப்பு



*சுதந்திரம் எங்களது பிறப்புரிமை. அதை இன்னொருவர் எமக்கு எழுதித் தரவேண்டிய அவசியமில்லை. அதை இன்னொருவர் பறிக்கவும் முடியாது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.*

*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகஅரசறிவியல் துறையின் அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ’அரசறிவியலாளன் இதழ் 6’ நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.*

*அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -*

*சுதந்திரக் காற்றை நீங்களாகச் சுவாசிக்க முடியாது. முன்னெடுப்புகள் இல்லாமல் எதையும் சாதித்து விடமுடியாது. இந்தியா ஒரு பெரிய நாடு.*

*எத்தனையோ மொழிகளையும், எல்லைகள் அனைத்திலும் பயங்கரமான பிரச்சினைகளைக் கொண்டதொரு நாடு. ஆனால் அங்கு எல்லாமிருக்கிறது.*

*தமிழ் மக்கள் தங்கள் பாதையை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும். அதற்காகப் புரட்சிதான் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லி விட்டு நான் வீட்டுக்குச் செல்லமுடியாது.*

*யூதர்கள் அல்லது பலஸ்தீனியர்கள் முன்னர் எங்குக் கண்டாலும் தங்களின் அடுத்த சந்திப்பு ஜெருசலேமில் என்று கைதட்டுவார்கள்.*

*நாங்கள் எங்களின் அடுத்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில்என்றுகைதட்டுகின்றோமா? தற்போது தேசியம் கதைக்கிறவர்கள் ஆசியாவிலேயேபிஸியானவர்கள்வாழ்வதோ கொழும்பில். லண்டன் குடியுரிமையும் கொண்டுள்ள அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற சிறப்புரிமையையும் கொண்டுள்ளனர்.*

*பலஸ்தீனம் போன்று எமது மண் பறிபோகவில்லை. நாங்கள் தற்போது பலஸ்தீனியர்கள் போன்று அகதி முகாம்களில் இருக்கவில்லை.*

*எங்கள்தாய்நிலத்தைப்பாதுகாப்பதற்கான போதிய அறிவு எம் மத்தியிலுள்ளது. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புரிந்துணர்வுப் பண்பு ஒவ்வொருவருக்கும் தேவையானதொன்று. ஆக்கிரமிக்கும் இனத்தின் செயற்பாடுகளைத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டு தங்களைப் பாதுகாக்கவேண்டும். - என்றார். (05)*

# பிரதேச மட்ட விளையாட்டு விழாவில் களுதாவளை கென்னடி சாம்பியன்!




(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம், கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் மற்றும் செட்டிபாளையம்நியூட்டன்விளையாட்டு கழகம், கிராம ஆலயங்கள், பொது அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச மட்ட விளையாட்டு நிகழ்வுபுதன்கிழமைபிரதேசசெயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்முதன்மை அதிதியாக மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா யுலேக்கா முரளிதரனும், சிறப்பு அதிதியாககிழக்குமாகாணவிளையாட்டு திணைக்கள மாகாண பணிப்பாளர்



உதயகுமார் சிவராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையில் இடம்பெற்றமைதானமற்றும்குழுநிலை போட்டிகளின் இறுதிப் போட்டி நிகழ்வுகளும் , வெற்றியீட்டியோருக்கான சான்றிதழ்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேசமட்டவிளையாட்டுநிகழ்வில் களுதாவளை கெனடி விளையாட்டு கழகம் முதலாம் இடத்தையும் (தங்கம் - 24, வெள்ளி - 22, வெண்கலம் - 12 ) செட்டி பாளையம் நீயூட்டன் விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் (தங்கம்-12, வெள்ளி-11, வெண்கலம்-10) பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலாளர் சா. அறிவழகன், செட்டிபாளைய கிராம ஆலய மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(05)

# எழுத்தாளர் தீபச்செல்வனிடம் பயங்கரவாத பிரிவு விசாரணை



எழுத்தாளர் தீபச்செல்வனை பயங்கரவாத விசாரணை பிரிவினர் நேற்று விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனின்நாவல்வெளியீட்டு நிகழ்வை நடத்தியமைக்காகவே இவ்வாறு விசாரணை இடம்பெற்றது. புத்தகம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்கும் நோக்கில் எழுதப்பட்டதா என்றும் விசாரணையின்போது கேட்கப்பட்டது. இதேவேளை குறித்த புத்தகத்தின் வெளியீட்டு விழாவை நீங்கள் ஏன் நடத்தீனர்கள் என்று கேட்டார்கள்.

கிளிநொச்சியின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனை மதிப்பளிப்பு செய்யும் நோக்கிலேயே வெளியீட்டு விழாவை நடத்தியதாக கூறினேன். நேற்று காலை 11மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட விசாரணை சுமார் இரண்டறைமணிநேரத்திற்கும்மேலாக இடம்பெற்றது என தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.04.2024இல் வெளியிடப்பெற்றது